**கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில்சார் கல்வி அமைச்சு**

**தேசிய தொழில்நுட்ப கல்வியியற் கல்லூரியை நிறுவுதல் குளியாப்பிட்டி**

# வெற்றிடம் (ஒப்பந்த அடிப்படையில்)

நிதி அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட 2019.03.15ம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்று நிருப இல. 1/2329இன் பிரகாரம் கீழ்க்காணும் பதவிகளுக்காக தகைமையான சுறுசுறுப்பான இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **குவான்டிட்டி சேர்வையர் (PS4-வகுதி A) - 01 பதவி**
**(Quantity Surveyor)**

**தகைமைகள் (கீழேயுள்ள i அல்லது ii அல்லது iii)**

i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட குவான்டிட்டி சேர்வேயில் ஓர் இளமாணிப் பட்டம்

**அல்லது**

குவான்டிட்டி சேர்வேயில் பட்டத்திற்குச் சமமான ஓர் தகைமையாக ப.மா.ஆ. வினால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் தகைமை

**அல்லது**

குவான்டிட்டி சேர்வேயில் ஓர் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ஓர் சமமான தொழில் சார் தகைமை/ ஓர் இணை அங்கத்துவம்

**அல்லது**

குவான்டிட்டி சேர்வேயுடன் சார்ந்த ஓர் பதவிக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் தொழில்நுட்ப தொழில்சார் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்சார் தகைமை மட்டம் 7 இற்கு குறையாத ஓர் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்

**அத்துடன்**

விசேடத்துவ தேவைப்படும் விடயப் பரப்பில் குறைந்தபட்சம் 06 வருட அனுபவம்

ii. தொழில்நுட்பத் துறையுடன் சார்ந்த ஓர் பதவிக்காக மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் தொழில்நுட்ப/ தொழில்சார் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் NVQ மட்டம் 6 இற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழைப் பெற்றிருத்தல்

**மற்றும்**

குவான்டிட்டி சேர்வேயில் தகைமைக்குப் பின்னரான விசேடத்துவ விடயப்பரப்பில் குறைந்தபட்சம் 11 வருட அனுபவம்

iii. தொழில்நுட்பத் துறையுடன் சார்ந்த ஓர் பதவிக்காக மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்கப்பட்ட ஓர் தொழில்நுட்ப தொழில்சார் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்சார் தகைமை மட்டம் 5 இற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்

**மற்றும்**

குவான்டிட்டி சேர்வேயில் விசேட தகைமைக்கு பின்னரான விடயப் பரப்பில் குறைந்த பட்சம் 16 வருட அனுபவம்

**வயது:**

விண்ணப்பங்கள் மூடப்படும் திகதியில் 64 வயதிற்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

மேற்படி பதவிக்கான தேவைப்படும் திறன்கள்

i. சிறந்த தனிப்பட்ட தொடர்புகள் (பேச்சு மற்றும் எழுத்து) மற்றும் ஆங்கிலத்தில் அறிக்கை எழுதும் ஆற்றல்
ii. Auto CAD மற்றும் MS Project அல்லது சமமான திறன்
iii. MS-Office இல் அறிவு ஊடாக கணனித் தேர்ச்சி
iv. ஓர் அணியாக மற்றும் நானாவித கடமைகளை சமாளிக்கக் கூடியதான சுயாதீனமாக வேலை செய்யும் ஆற்றல்
v. உரிமை கோரல்களை மறு ஆய்வு செய்வதில் திறன் ஒப்பந்த விதிகளின் மறுமொழி விளக்கம்

வெளிநாட்டு நிதியுதவி திட்டங்களில் அனுபவம் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் நிர்மாண ஒப்பந்தங்களை நிர்வகிக்கும் சட்டங்கள் மற்றும் ஆங்கிலத்தில் அறிக்கை எழுதும் திறன் ஆகியவற்றைப் புரிந்து கொள்வதில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**வேலைவாய்ப்பு விதிமுறைகள்:**

ஆட்சேர்ப்பு ஒரு வருட காலத்திற்கு முழு நேர ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படும் மற்றும் திருப்திகரமான செயற்திறனுக்கு உட்பட்டு ஆண்டுதோறும் புதுப்பிக்கப்படக் கூடியது. கடமையாற்றும் இடம் நாரங்கல்ல, குளியாப்பிட்டியில் உள்ள திட்டத் தளத்தில் அமையும்

**விண்ணப்பங்கள்:**

கல்வி, தொழில்முறை தகுதிகள் மற்றும் அனுபவத்துடன் தொடர்புடைய பாடத்திட்ட பரப்பை வழங்கும் விண்ணப்பங்கள் இரண்டு தொடர்புடைய பரிந்துரைப்பவர்களின் தொடர்பு விபரங்களுடன் (கைத்தொலைபேசி, மின்னஞ்சல்) பதிவுத் தபாலில் 2025 ஜனவரி 10 அல்லது அதற்கு முன் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். உறையின் இடது பக்க மூலையில் பதவியைக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பத்துடன் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும். அரசு/ அரசு சார்ந்த துறையில் உள்ள விண்ணப்பதாரர்கள் திணைக்களத் தலைமையூடாக தங்கள் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

குறுகிய பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர்

**திட்டப் பணிப்பாளர் (KOICA**
**கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில்சார் கல்வி அமைச்சு,**
**6ம் மாடி, 'இசுருபாய', பத்தரமுல்ல.**